**கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா**

சிரேஷ்ட விரிவுரையாளர் - வியாபாரப் பொருளியல்
முகாமைத்துவத் துறை,முகாமைத்துவ வர்த்தக பீடம்,
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்,ஒலுவில், # 32360, இலங்கை. E-mail: amustafa@seu.ac.lk

2015

# வெளிநாட்டு நேரடி முதலீட்டின் கோட்பாடுகள்

## அறிமுகம் :

இரண்டாம் உலகமகாயுத்தத்திலிருந்து வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வளர்ச்சியினை என்ன காரணிகள் மூலம் விளக்கலாம் அல்லது என்ன காரணிகள் பல்தேசிய கம்பனிகளுடைய தோற்றத்திற்கும் அதனுடைய விஸ்தரிப்புக்கும் காரணமாக அமைகின்றது என்பதனை விளக்குவதற்கு முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளே வெளிநாட்டு நேரடி முதலீடு பற்றிய கோட்பாடுகளாகும்.

பழம் பொருளியல் வர்த்தக, உற்பத்திக் கோட்பாடுகளின் சில எடுகோள்கள் மெய்யுலக நிலமைகளுக்கு நம்பகத்தன்மை அற்றதாகவே காணப்பட்டன உதாரணமாக, ஹெக்சர் ஒலின் கோட்பாட்டில் காணப்படும் உற்பத்தி தொழிற்பாட்டில் தொழில்நுட்பம் நிலையானது மற்றும் சர்வதேச ரீதியிலான தூய நிறைபோட்டி என்ற அம்சம் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் கோட்பாடுகள் மூலம் இதன் நம்பகத் தன்மையை குறைவடையச் செய்கின்றது. வெளிநாட்டு முதலீடு மூலமாக தொழிநுட்பமானது மாற்றம் அடைகின்றது. அதாவது வெளிநாட்டு முதலீடு மூலமாக தொழிநுட்பம் உள்வருகின்றது. மேலும் தூய நிறைபோட்டி என்பதும் வெளிநாட்டு

முதலீடு மூலமாக வள உட்பாய்ச்சல் உள்வரும் போது சந்தையானது தூய நிறைபோட்டியிலிருந்து நிறைபோட்டியற்ற சந்தையாக மாற்றமடைகின்றது. அதாவது தூய நிறைபோட்டியில் காணப்படுகின்ற பண்புகள் மாறுவதற்கு வெளிநாட்டு நேரடி முதலீடு கோட்பாடுகள் வழிவகுக்கின்றன.

வெளிநாட்டு நேரடி முதலீட்டினுடைய கோட்பாடுகளானது தங்கியிருத்தல் பள்ளிக்கூட சிந்தனையாளர்கள் ( The Dependency School), நவீன பள்ளிக்கூட சிந்தனையாளர்கள் ( The Modernization), ஒன்றுசேர் பள்ளிக்கூட சிந்தனையாளர்கள் ( The Intrgrative School) போன்ற மூன்று வகை வெளிநாட்டு நேரடி முதலீட்டு பள்ளிக்கூட சிந்தனையாளர்களுள் சந்தை நிறைவின்மைக் கோட்பாடு, உற்பத்தி வாழ்க்கை வட்ட மாதிரி, கொடுக்கல் வாங்கல் அணுக முறை, உள்ளகமயமாக்கல் கோட்பாடு, பல்நோக்கு மாதிரி போன்ற பல வெளிநாட்டு நேரடி முதலீடு கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் பல்நோக்கு மாதிரி அல்லது OLI மாற்றம் என்ற அணுகுமுறையே இன்று மிகவும் செல்வாக்கு பெற்றிருக்கின்றன.

## சந்தை நிறைவின்மைக் கோட்பாடு (The Market-Imperfections Approach)

இரண்டாம் உலகமகாயுத்தத்தின் பின்னர் வெளிநாட்டு நேரடி முதலீட்டினுடைய காரணியான சந்தை நிறைவின்மையை விளக்குவதற்கு பெரும்பாலான கவனம் செலுத்தப்பட்டன. ஹைமர்

(1960) மற்றும் கின்டில்பேர்கர் (1969) என்பவர்கள் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பனவற்றுக்கு சந்தை நிறைவின்மை காணப்படுகின்றது என வாதிட்டனர். ஒரு நாட்டின் வெளிநாட்டு நேரடி முதலீடு இடம் பெறுவதற்கான முன்நிபந்தனையானது உள்நாட்டு நிறுவனங்களினால் கொண்டிருக்கப்படாத சில நன்மைகளை வெளிநாட்டு நிறுவனங்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும்.

இவர்கள் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை இடம்பெறுவதற்கான நிபந்தனைகளாக பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றனர். அதாவது குறிப்பிட்ட ஒரு நாட்டின் சந்தை நிலைமைகளை அறிந்திருத்தல், சட்டம், பழக்கவழக்கங்கள், கலாச்சாரம், கேள்வி நிலைமைகள், நாணயமாற்று வீதம், போக்குவரத்து செலவு, இறுப்புக்கள், இறுப்பு அல்லாத தடைகள் என்பனவாகும். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் ஒரு குறிப்பிட்ட நாட்டிலோ அல்லது ஒரு குறிப்பிட்ட வெளிநாட்டிலோ அறியப்பட முடியுமென்பதாகும். இவற்றினை ஒரு குறிப்பிட்ட நாடு அறிந்திருப்பின் அங்கு சந்தை நிறைவு ஏற்படும். இதனை அறியாது இருப்பின் சந்தை நிறைவின்மையானது ஏற்படலாம். உதாரணமாக ஒரு பொருளினை உற்பத்தி செய்வதற்கு உள்நாட்டில் உள்நாட்டு முதலீட்டாளன் மேற்குறிப்பிட்ட நிபந்தனை யாவற்றையும் அறிந்திருப்பின் இதனை அம்முதலீட்டாளனுக்கு உள்நாட்டு சந்தைக்கான நிறைவு அப்பொருளின் மீது காணப்படுகின்றது என்பதாகும். மாறாக வெளிநாட்டு முதலீட்டாளன் ஒரு பொருள் தொடர்பாக மேற்க்குறிப்பிட்ட நிபந்தனை யாவற்றையும் முதலீடு செய்கின்ற நாட்டில் அறிந்திருப்பின் அம்முதலீட்டாளன் சந்தை நிறைவினைக் கொண்டுகாணப்படுகின்றான். அவ்வாறு காணப்படாவிடின் சந்தை நிறைவின்மையென அழைக்கப்படுகின்றது.

மேற்க்குறிப்பிட்ட நிபந்தனைகள் உள்நாட்டில் நிறைவாக காணப்பட்டால் உள்நாட்டு முதலீட்டாளனுக்கு அது உள்நாட்டு முதலீடாகும். வெளிநாட்டில் காணப்பட்டால் அது வெளிநாட்டு நேரடி முதலீடாகும். மேலும் இக்கோட்பாட்டினை விரிவுபடுத்தினால் சந்தை நிறைவை உள்நாட்டுச் சந்தை நிறைவாகவும் வெளிநாட்டுச் சந்தை நிறைவாகவும் வெளிநாட்டுச் சந்தை நிறைவாகவும் அதேபோல் உள்நாட்டு நிறைவின்மையாகவும் வெளிநாட்டுச் சந்தை நிறைவின்மையாகவும் நோக்கலாம்.

உள்நாட்டு சந்தை நிறைவு என்பது மேற்க்குறிப்பிட்ட நிபந்தனைகளின் ஏதாவது சிலவற்றின் மூலமாக பெறப்படுகின்ற அனுகூலம் மற்றைய சிலவற்றிலிருந்து பெற்றுக்கொள்கின்ற பிரதிகூலத்தினை விட அதிகமாக இருப்பின் அது உள்நாட்டு சந்தை நிறைவாகும். உள்நாட்டு சந்தை நிறைவின்மை என்பது மேற்கூறப்பட்ட நிபந்தனைகளின் சிலவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற அனுகூலமானது வேறு சில நிபந்தனைகள் மூலமாக பெறப்படுகின்ற பிரதிகூலத்தினை விட குறைவாக காணப்பட்டால் அது உள்நாட்டுச் சந்தை நிறைவின்மையாக அம்முதலீட்டாளனுக்கு காணப்படும்.

வெளிநாட்டுச் சந்தை நிறைவு என்பது வெளிநாட்டில் மேற்கூறப்பட்ட நிபந்தனைகளின் சிலவற்றிலிருந்து பெறும் அனுகூலம் வேறு சில நிபந்தனைகளிலிருந்து பெறும் பிரதிகூலத்தை விட அதிகமாயின் அது அம்முதலீட்டாளனுக்கு வெளிநாட்டுச் சந்தை நிறைவாகும். வெளிநாட்டுச் சநடதை நிறைவின்மை என்பது மேற்கூறப்பட்ட சில நிபந்தனைகளிலிருந்து பெறும் அனுகூலத்தினை விட அதிகமாயின் அது வெளிநாட்டுச் சந்தை நிறைவின்மையாகும்.

ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட இக்கோட்பாடு உற்பத்தி வாழ்க்கை வட்டக் கோட்பாட்டில் காணப்படுகின்ற குறைபாட்டையும் பின்னர் நிவர்த்தி செய்யும் ஒன்றாகவும் காணப்பட்டது. ஏனெனில் உற்பத்தி வாழ்க்கை வட்ட மாதிரி ஆனது வெளிநாட்டு நேரடி முதலீடு மூலமான தொழிநுட்பத்தினை விளக்குகின்றது. எனினும் நிறுவனக் கோட்பாட்டினை அது விளக்கவில்லை. சந்தை நிறைவின்மை அணுகுமுறையானது நிறுவனக்கோட்பாடு பற்றி விளக்குகின்றது.

## உற்பத்தி வாழ்க்கை வட்ட மாதிரி (The Product Life Cycle Model)

இக் கோட்பாடு வேனன் என்பவரால் (1966, 1971) இலும் முன்வைக்கப்பட்டது. இக்கோட்பாடு வெளிநாட்டு நேரடி முதலீட்டினை விளக்குவதற்கு முன்வைக்கப்பட்ட ஓர் அணுகுமுறையாகும். இரண்டாம் உலகமகாயுத்தத்திற்கு பிந்திய அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்குரிய வர்த்தக அணுகுமுறையினை வேறுபட்ட முறையில் நோக்குகின்றார். மேலும் இக்கோட்பாடு உள்நாட்டு, வெளிநாட்டு உற்பத்தியோடு தொடர்புடைய தாக்கங்களையும் ஒப்பீடு செய்கின்றது. ஒரு பொருளின் ஆயட்காலம் என்பது புதிய பொருளின் அபிவிருத்தியிலும் அதன் பதிலீட்டுப் பண்டங்களின் வளர்ச்சியிலும் தங்கியுள்ளது. அதனுடைய ஆயுட்காலத்தில் ஒரு பொருளானது பல்வேறு கட்டத்தில் ஊடறுத்துச் செல்கின்றது. இவரின் கோட்பாடானது மூன்று வேறுபட்ட கட்டங்களைக் கொண்டு காணப்படுகின்றன.

## 1. புதிய பொருள் கட்டம் (The New Product Stage):-

இந்தக் கட்டத்தில் எல்லா உற்பத்திகளும் புதிய தொழில்நுட்பம் பாவிக்கும் நாட்டில் அமர்த்தப்படுகின்றது. இக்கட்டத்தில் பெரும்பாலான உற்பத்த ிஉள்நாட்டுச் சந்தைக்காக உற்பத்தி செய்யப்படுகின்றது. ஏற்றுமதிகள் இடம்பெறுவதற்கு ஆரம்பிக்கும். ஆனால் ஆரம்பத்தில் உள்நாட்டு விற்பனையானது குறைவானதாகவே இருக்கும். இதன் பின்னர் உற்பத்தியாளர்கள் பொருள் பற்றிய பின்னூட்டியை பெறுவதற்கு நுகர்வோரை நாடுவர் அல்லது பொருள் பற்றிய மாற்றங்களைச் செய்வதற்கு நுகர்வோரைக் கேட்பர். இக்கட்டத்தில் ஆரம்பத்தில் பொருளுக்கு விலை நெகிழ்ச்சியற்றதாகவே காணப்படும். ஏகபோக உரிமை, சட்டம் அதாவது பிற உற்பத்தியாளர்கள் குறிப்பிட்ட உற்பத்திப்பொருளை சில காலங்களுக்கு பின்பற்றுவதனைத் தடை செய்யும்.

## 2 முதிர்ச்சி உற்பத்திக் கட்டம் (The Maturing Product Stage)

இந்தக் கட்டத்தில் உற்பத்திப் பொருளானது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அதிக போட்டித்தன்மையை கொண்டிருக்கும். பொருளுக்கான ஏகபோக உரிமையானது குறைவடையும். எனவே ஏனைய நாட்டு உற்பத்தியாளர்கள் அக்குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்வதற்கு ஆரம்பிப்பர். இக்கட்டத்தில் கேள்வி அதிகரித்து விலை நெகிழ்ச்சி கொண்டதாக காணப்படும். அதே நேரத்தில் வெளியீட்டில் அதிகமான விகிதசமன் இப்பொழுது வெளிநாடுகளிலுள்ள சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும். இதன் காரணமாக புதிய பொருளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் வெளிநாட்டு சந்தைகளில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மூலமாக தங்களது தொழிற்சாலைகளை நிறுவும். எனவே போக்குவரத்து

செலவினைக் குறைத்து ஏற்றுமதி வரிகளும் குறைவடையும். இதன் காரணமாக புதிய பொருள் உற்பத்தி செய்த நாட்டின் குறிப்பிட்ட பொருளின் ஏற்றுமதி வீழச்சியடையலாம்.

### 3 தர நியமமாக்கல் கட்டம் : (The Standardization Stage)

இக்கட்டத்தில் பொருள் ஆனது தர நியமத்தினை அடைகின்றபோது விலை, போட்டித்தன்மை தீவிரமடையும். இது பொருளினை உற்பத்தி செய்வதற்கான ஆகக்குறைந்த அமைவிடத்தை தேடி உற்பத்தியாளர்களை இது வைக்கின்றது. அதாவது அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் குறைந்த கூலிச் செலவுகள் இந்நாடுகளுக்கு அதிக உற்பத்தியை மாற்றுவதற்கு அல்லத முதலீட்டினை அனுப்புவதற்கு விரும்பும். இதன் காரணமாக புதிய பொருளானது உற்பத்தி செய்யப்படுகின்ற நாட்டிலுள்ள உற்பத்தியும் வீழ்ச்சியடைய ஆரம்பிக்கும். இந்நாடுகளின் ஏற்றுமதியானது வீழ்ச்சியடையும். இறுதியில் புதிய பொருளினை உற்பத்தி செய்த நாடானது தேறிய பொருள் இறக்குமதியாளர்களாக மாறும். புதிய பொருள் உற்பத்தி செய்யப்படுகின்ற நாடானது ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஏற்றுமதிகள் குறைவடைந்து வெளிநாட்டு நேரடி முதலீடு காரணமாக ஆரம்பத்தில் பொருளினை உற்பத்தி செய்த நாட்டில் இறக்குமதிகள் அதிகரிக்கும்.

உற்பத்தி வாழ்க்கை வட்ட மாதிரியின் அடிப்படையில் ஆரம்பத்தில் பொருளை ஏற்றுமதி செய்கின்ற நாட்டிற்கு வெளிநாட்டு நேரடி முதலீடானது வருவதற்கு வாய்ப்பில்லை. அவ்வாறு வந்தாலும் கூட தொழில்நுட்பம் அற்ற வடிவத்தில் தான் அந்நாடு வெளிநாட்டு நேரடி முதலீட்டினை பெற விரும்பும். ஏனெனில் அவர்களுக்கு குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்வதற்கு தொழில்நுட்பம் அற்ற வடிவத்தில்

தான் அந்நாடு வெளிநாட்ட நேரடி முதலீட்டினை பெற விரும்பும். ஏனெனில் அவர்களுக்கு குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்வதற்கு தொழில்நுட்பம் தாராளமாகக் காணப்படுகின்றது. முதிர்ச்சிக் கட்டத்தின் பின்னர் பொருளினை இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு வெளிநாட்டு நேரடி முதலீடு மூலமாக தொழிநுட்பம் கிடைக்கப்பெறுகின்றது. அல்லது தொழில்நுட்பத்தினையே வெளிநாட்டு நேரடி முதலீடாக பெறும் வாய்ப்புண்டு. ஆகவே இறக்குமதி நாடுகள் அக்குறிப்பிட்ட பொருளினை வெளிநாட்டு நேரடி முதலீடாக பெறவும் வாய்ப்புண்டு. ஆகவே இறக்குமதி நாடுகள் அக்குறிப்பிட்ட பொருளினை வெளிநாட்டு நேரடி முதலீடு மூலமாக பெற்ற தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து குறிப்பிட்ட பொருளினை ஏற்றுமதி செய்த நாட்டிற்கோ அல்லது வேற நாடுகளுக்கோ ஏற்றுமதி செய்யலாம். எனவே வேனனினால் முன்வைக்கப்பட்ட இக்கோட்பாடு வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு வழிகோலுகின்ற பகுத்தறிவு செயன்முறையை விளக்குவதற்கு இன்றும் பாவிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கொடுக்கல் வாங்கல் அணுகுமுறை (The Transactional Approach)

வெளிநாட்டு நேரடி முதலீடு பற்றிய இக்கோட்பாடு கேவ்ஸ் (1971, 1982), ஜோன்சன் (1970) இனாலும் முன்வைக்கப்பட்டது ஆகும். இது கிடை ரீதியான வெளிநாட்டு நெரடி முதலீட்டினை விளக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது. வேளிநாட்டுக்கு உற்பத்திகளை ஒரு நிறுவனம் ஏற்றுமதி செய்ய விரும்புகின்றது எனக் கொள்க. அதாவது இக்கோட்பாடு விளக்குவது யாதெனில் சிலவகையான நன்மைகள்

உள்நாட்டினை விட வெளிநாட்டில் உற்பத்திகளை மேற்கொள்வதனால் சில நன்மைகள் காணப்படுகின்றன. உள்நாட்டினை விட வெளிநாடுகளில் உற்பத்தியை மேற்க்கொள்வதால் சில வகையான நன்மைகள் காணப்படாவிட்டால் வெளிநாட்டுக்கு உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு நிறுவனங்கள் விரும்பலாம். வெளிநாடுகளில் உற்பத்தி செய்வதன் மூலமாக அதிகமான போக்குவரத்து செலவுகளை தவிர்த்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கு மாறாக வெளிநாட்டு நிறுவனமானது விரிகளையும் இறுப்புக்களையும் வெளிநாடுகளில் சந்திக்கவும் நேரிடும். மற்றுமொரு அமைவிட ரீதியான நன்மை வெளிநாட்டில் குறைந்த ஊழியச் செலவு அல்லது வரி ஊக்குவிப்பு அல்லது அரசாங்க உதவிகள் அடிப்படை வசதிகள் என்பன அமையலாம். எனவே இதனடிப்படையில் வெளிநாட்டு சந்தையானது விரைவாக வளர்ச்சியடைந்து சென்றால் உள்நாட்டினை விட வெளிநாட்டிலேயே தொடர்ச்சியாக உற்பத்தி இடம் பெறும் என்பதாகும். இதனூடாக முதலீட்டினை விட வெளிநாட்டிலேயே தொடர்ச்சியாக உற்பத்தி இடம் பெறும் என்பதாகும். இதனூடாக முதலீட்டினை வரவழைக்கின்ற நாட்டில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல் இடம் பெறும் என்பதாகும். மேலும் அமைவிட ரீதியான அனுகூலத்தை உருவாக்குதல் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு அவசியமாகும். ஏன் பல்தேசிய கம்பனிகள் இன்னொரு நாட்டில் முதலிடுகின்றது என்பதனைத் தொரிந்து கொள்வதற்கு இது அவசியமாகும். அதாவது பல்தேசிய கம்பனிகள் குறைந்த போக்குவரத்துச் செலவு, குறைந்த வர்த்தகத் தடை எந்த நாட்டில் காணப்படுகின்றதோ அந்த நாட்டினைத் தெரிவுசெய்கின்றது.அதாவது வெவ்வேறுபட்ட அமைவிடங்களில் வெவ்வேறுபட்ட அனுகூலங்கள்' காணப்படுகின்றன. எனவே அனுகூலம் கூடிய நாட்டின் பல்தேசிய கம்பனிகள் தெரிவு

செய்து இதன் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீடானது உட்பாய்ச்சப்படுகின்றது.

## உள்ளகமயமாக்கல் கோட்பாடு ( The Internlisation)

இக் கோட்பாடு கோஸ்(1937) பக்லி, காஸன் (1976) இலும் பின்னர் காசன் 1986 இலும் இக்கோட்பாடு முன்வைக்கப்பட்டதாகும். இக்கோட்பாடானது ஒரு நாடு வெளிநாட்டு சந்தைகளில் விற்பனைகளை மேற்கொள்வதா? அல்லது உள்நாட்டு சந்தையில் விற்பனையை மேற்கொள்வதா? என்பனவற்றினுடைய தீர்மானமாகும். அதாவது உள்நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்வதன் மூலமான அனுகூலமானது வருமானம் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றினை விற்பனை செய்வதற்குரிய செலவினை விட உள்நாட்டில் அதிகமாக காணப்பட்டால் உள்நாட்டில் விற்பனையை செய்தலாகும். வெளிநாட்டு நேரடி முதலீடானது மூலப்பொருள் வடிவத்தில் ஒரு நாட்டிற்கு வரும் போது வெளிநாட்டச் சந்தையை விட உள்நாட்டுச் சந்தை அதிக தன்மையினைக் கொண்டிருக்கும். இக்கோட்பாடானது ஏற்றுமதி நாடொன்றில் ஒரு உப கம்பனியை ஏற்படுத்தலுக்கான தெரிவு பற்றி ஆய்வு செய்கின்றது. வெளிநாட்டு நேரடி முதலீடு மூலமான விஸ்தரஜப்பானது பல்தேசிய கம்பனிக்கான ஒரு மாற்று வழி ஆகும். அதாவது மற்றைய நிறுவனங்களை விட போட்டி அனுகூலங்களை பல்தேசிய கம்பனி கொண்டிரக்கும் போது வெளிநாட்டு நேரடி முதலீடு மூலம் நன்மையாகக் காணப்படும் என்பதனையே இக்கோட்பாடு விளக்குகின்றது.

## வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பல்நோக்கு மாதிரி அல்லது OLI மாற்றம் ( The Eclectic Theory of FDI/ The OLI Paradigm )

வெளிநாட்டு நேரடி முதலீட்டினை தீர்மானிக்கின்ற பல்வேறு காரணிகளைச் சுருக்கி மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் கோட்பாடாக ஜோன் டன்னிங் (1977) என்பவரால் முன்வைக்கப்பட்டது. அவைகள் பின்வருமாறு,

1. உரிமை நோக்கிய அனுகூலம்∴ நிறுவனம் நோக்கிய அனுகூலம் (O)
   (Ownership Advantage/ Firm Specific Advantage)
2. அமைவிடம் நோக்கிய அனுகூலம் ( L)
   (Location Advantage /Country Specific Advantage (L))
3. உள்மயமாதல் அனுகூலம் (I)
   Internalisation Advantage (I) )

மேற்க்குறிப்பிட்ட மூன்று முடுஜ இனுடைய அனுகூலங்கள் ஒரே நேரத்தில் இருத்தல் வேண்டும். இவ்வாறு மூன்றும் ஒரே நேரத்தில் இருந்து கொண்டு நேரடி வெளிநாட்டு முதலீட்டினை விளக்குவதற்கு இக்கோட்பாடு பாவிக்கப்படுகின்றது.

**உரிமை நோக்கிய அனுகூலம் (O)**

இது ஏன் ஒரு நாடு இன்னொரு நாட்டிற்கு நேரடி வெளிநாட்டு முதலீடு செல்ல வேண்டும் என்ற கேள்விக்கு

விடையளிக்கின்றது. அதாவது பல்தேசியக் கம்பனிகளானது ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உரிமை நோக்கிய அனுகூலத்தினைக் கொண்டு காணப்படுகின்றன. அதாவது இது உரிமை அனுகூலம் அல்லது முக்கிய திறன் என்பவற்றினைக் குறிக்கின்றது. வெளிநாட்டில் ஒரு நிறுவனத்திற்குரிய இயக்கும் செலவுகளை ஈடு செய்வதற்கு இவ்வாறான நிறுவன ரீதியான நன்மைகள் என்பது முக்கியமானதாகும். இந்நிபந்தனைகள் கட்புலனாகாதவையாகவும், குறைந்த செலவில் பல்தேசிய நிறுவனத்திற்குள்ளேயே பல விடயங்களைப் பரிமாற்றக் கூடியதாகவும் இருக்கும். உதாரணமாக பண்டக்குறி சிக்கன அளவுத்திட்ட நன்மைகள், தொழிநுட்பம் போன்றனவாகும். அதாவது ஒரு வெளிநாட்டில் இயக்கும் செலவுகளை ஈடுசெய்வதற்குரிய உயர்ந்த வருமானத்தினை நிறுவன நோக்கிய நன்மைகள் சுட்டிக்காட்டுகின்றது.

ஒரு வெளிநாட்டில் உள்ள தொழிற்சாலையை இயக்குகின்ற ஒரு பல்தேசிய முயற்சியானது உள்நாட்டுப் போட்டியாளர்களுடன் ஒப்பிடும் போது மேலதிக செலவுகளை கொண்டதாகக் காணப்படலாம். அம்மேலதிகச் செலவானது பின்வரும் காரணங்களுக்காக உருவாக்கப்படலாம்.

- கலாச்சார, சட்ட, மொழி வேறுபாடுகள்
- உள்நாட்டுச் சந்தை நிலைமை பற்றிய போதிய அறிவின்மை

- வெளிநாட்டில் தொழிற்சாலையை இயக்குவதற்கும் நிறுவனங்கள் தொடர்பை ஏற்படுத்துவதற்கான செலவாகும்.

எனவே ஒரு வெளிநாட்டு நிறுவனமானது இன்னொரு நாட்டில் வெற்றிகரமாக செயற்படுமாயின் அது வெளிநாட்டில் இயக்குகின்ற செலவினை ஈடுசெய்யக்கூடிய அளவு அனுகூலத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதாகும் அதாவது ஒரு நிறுவனம் ஒரு குறிப்பிட்ட செலவினை விட உயர்ந்த வருமானத்தைக் கொண்டிருக்க வேண்டும். அல்லது ஒரு குறிப்பிட்ட வருமானத்திற்கு குறைந்த செலவினைக் கொண்டிருக்க வேண்டும். இந்நிறுவனத்தின் இலாபமானது பின்வருமாறு அமைதல் வேண்டும். பல்தேசிய கம்பனி உள்நாட்டில் இயங்கும் போது,

இலாபம் = மொத்த வருமானம்- மொத்த செலவு

இது வெளிநாட்டில் இயங்கும் போது

இலாபம் = மொத்த வருமானம் - மொத்த செலவு – வெளிநாட்டில் நிறுவனத்தை இயக்குவதற்கான செலவு

வெளிநாட்டில் இயங்கும் நிறுவனங்களுக்கு மாத்திரமே வெளிநாட்டு செலவுகள் ஏற்படும். எனவே அவ்வாறான நிறுவனங்கள் உயர் வருமானத்தையோ அல்லது குறைந்த செலவினத்தையோ நிலைத்திருப்பதற்கு கொண்டிருக்க வேண்டும். என்பதாகும். எனவே இவ்வடிப்படையில் ஒரு நிறுவனமானது குறித்த நன்மையை விட தனியுரிமை

அதிகாரத்ததை கொண்டிருக்கின்ற பொழுது வெளிநாட்டில் மேலதிகமான நன்மையினை பெற்றுக் கொள்ளலாம். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட நிறுவனம் போடடியாளரை விட வெளிநாட்டில் குறைந்த எல்லைச் செலவினை அல்லது கூடுதலான எல்லை விளைவினைக் கொண்டிருக்குமாயின் அது வெளிநாட்டில் தனியுரிமையைக் கொண்டிருக்கலாம். இவ்வனுகூலம் கூடுதலான இலாபத்தை ஏற்படுத்தும். இது ஒரு நிறுவனத்திற்கு உரியதாக காணப்படும்.

எனவே வெளிநாட்டில் ஒரு பல்தேசிய முயற்சியாண்மை இலாபகரமானதாக இருக்க வேண்டுமாயின் தன்னுடைய போட்டியாளர்களை விட சில வகையான அனுகூலங்களைக் கொண்டிருக்க வேண்டும். இந்த நன்மை ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு மட்டும் உரித்துடையதாக இருக்க வேண்டும். மேலும் இந் நன்மைகள் ஒரு நிறுவனத்திற்குள்ளேயே மாற்றப்படக்கூடியதாகவும் நாடுகளுக்கிடையே உடனடியாக எடுத்துச் டிசல்லக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இதுவே உரிமை நோக்கிய அல்லது நிறுவன நோக்கிய அனுகூலம் எனப்படுகின்றது.

**அமைவிடம் நோக்கிய அனுகூலம் அல்லது நாடு நோக்கிய அனுகூலம் (L)**

அமைவிடம் நோக்கிய அனுகூலம் என்பது எந்த வெளிநாட்டில் பல்தேசியக் கம்பனியை அல்லது பல்தேசிய முயற்சியை ஏற்படுத்துவது என்பதுடன் தொடர்புபட்டது ஆகும். முதலீட்டு அமைவிடம் நோக்கிய தெரிவானது சமூக, கலாச்சார, அரசியல் போன்ற காரணிகளில் தங்கியுள்ளது ஆகும். எனவே அமைவிட ரீதியான அனுகூலமானது ஒரு பல்தேசிய கம்பனியை முதலீட்டினை வரவழைக்கின்ற நாட்டுச் சந்தைக்ககுரிய காரணங்களை தீர்மானிப்பதாகும். அதாவது சார்பு ரீதியான கவர்ச்சித் தன்மையானது நீண்டகாலத்தில் மாற்றமடையலாம். ஏனெனில் முதலீட்டினை வரவழைக்கின்ற நாடானது நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்கான போட்டி ரீதியான அனுகூலத்தை ஒரு குறிப்பிட்டளவிற்கு வடிவமைத்து கட்டியெழுப்புவதாகும். இதனால் நாடு நோக்கிய அனுகூலம் என்பது எங்கே ஒரு பல்தேசிய கம்பனியானது முதலீடு செய்ய வேண்டும் என்பதனை 3 அனுகூலங்களாக நோக்கப்படுகின்றது.

1. பொருளாதார அனுகூலம் (E)
2. சமூக அனுகூலம் (S)
3. அரசியல் (P)

பொருளாதார அனுகூலம் என்பது உற்பத்திக் காரணிகளின் அளவும், தரவும் சந்தைகளின் அளவும், சந்தையின் பருமனும்

போக்குவரத்து தொடர்பாடல் என்பனவாகும். அதாவது இவைகளினது அனுகூலம் செலவினத்தை விட அதிகமாக இருக்க வேண்டும் என்பதாகும். சமூக கலாச்சார அனுகூலம் என்பது முதலீட்டினை கொடுக்கின்ற நாட்டிற்கும் ( Home Country ) முதலீட்டினை வரவழைக்கின்ற நாட்டிற்கும் ( Host Country) இடையிலான மனோ ரீதியான இடைவெளி, வெளிநாட்டவர்களை நோக்கிய பொதுவாக அபிப்பிராயம். மோழி வேறுபாடு நோக்கிய முழுவிடயங்களை இது உள்ளடக்கும். அரசியல் அனுகூலம் என்பது நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் சர்வதேச உற்பத்தி நிறுவனங்களுக்கிடையிலான வர்த்தகம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொதுவானதும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கொள்கையுமாகும்.

எனவே பல்தேசிய கம்பனி ஒன்றிற்குரிய கவர்ச்சியரமான நாடு நோக்கிய அனுகூலம் என்பது பாரிய வளர்ச்சியடைந்து வருகின்ற உள்வருமானச் சந்தை, குறைந்த உற்பத்தி செலவுகள், முதலீடு செய்யும் நாட்டில் பற்றாக்குறையாக காணப்படுகின்ற அதிகளவான காரணி அளிப்பு, அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மை, வரிச் சலுகைகள் அரச ஊக்குவிப்புக்கள், குறைந்த ஊழியச் செலவு என்பனவாகும். எனவே பல்தேசியக் கம்பனியின் மூலம் முதலிடுகின்ற ஒரு குறிப்பிட்ட நாடு மேற்க்குறிப்பிட்ட சில குறிப்பிட்ட அனுகூலங்களை பல்தேசிய கம்பனியின் மூலம் முதலிடுகின்ற

ஒரு குறிப்பிட்ட நாடு மேற்க்குறிப்பிட்ட சில குறிப்பிட்ட அனுகூலங்களை பல்தேசிய கம்பனியின் உள்நாட்டிலும் கொண்டிருக்க வேண்டும் என்பதனையே அமைவிடம் நோக்கிய அல்லது நாடு நோக்கிய அனுகூலம் என்று குறித்து நிற்கின்றது.

**உள்மயமாதல் அனுகூலம்** ( I )

உள்மயமாதல் அனுகூலம் என்பது எப்படி நேரடி வெளிநாட்டு முதலீடு மூலமாக உள்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு ஒரு நிறுவனம் செல்வது என்பதனைக் குறித்து நிற்கின்றது. அதாவது பல்தேசிய முயற்சியாண்மையானது பல்வேறு வகையான நுழைவ முறைகளின் தெரிவுகளை இது விளக்குகின்றது. அதாவது சந்தை தொடக்கம் அதிகார வரிசை வரையாகும். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பல்தேசிய கம்பனி எவ்வாறு நுழையும் என்பதனை குறிப்பிடுகின்றது. அதாவது 100% வெளிநாட்டு சந்தையிலிருந்து 100% உள்நாட்டு சந்தைக்கு மாறுகின்றது இதனை கீழ்வருமாறு அதிகார வரிசைப்படுத்தலாம்.

- ஏற்றுமதி செய்தல் ( Export)
- ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் பெறல் ( Licensing)
- பிரத்தியேக அங்கீகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்துவ நிறுவனமாக மாறுதல் ( Franching)

- சிறு கூட்’டு முயற்சி நிறுவனம் ( Minoroty Joint Venture)
- வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கான பாரிய நடவடிக்கை ( MOFA)
- முற்றிலும் சொந்தமான உப கம்பனி (WOS)

ஏற்றுமதி என்பது முதலிடும் நாட்டினுடைய வெளிநாட்டு சந்தையினைக் குறிக்கும். முதலிடும் நாடானது பிறிதொரு தொடர்பற்ற நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதனைக் குறிக்கும். இங்கு கட்டுப்பாட்டு செலவுகள், நிறுவனத்தினுடைய கட்டுப்பாட்டு மட்டம் என்பன குறைவாக இருக்க வேண்டும். ஆனால் கொடுக்கல் வாங்கல் செலவு மிக அதிகமாக காணப்படும். இது முற்றிலும் சொந்தமான உப கம்பனிக்கு மாற்றமான தன்மையைக் கொண்டிருக்கும். அடுத்த படிமுறையாக பொருட்கள் சேவைகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசிடமிருந்து அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலும் முதலீடு செய்யும் நாட்டில் (Host Country) ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பொருட்கள் தேவைகளை விற்பதற்கு இந்நாட்டு அரசிடமிருந்து பிரத்தியேக அங்கீகாரம் அளிக்கப்பட்ட நிறுவனமாக மாறுதல். அடுத்து நுழைவின் ஒரு கட்டமாக முதலீடு செய்யும் நாட்டில் உள்ள அந்நாட்டு பிரசையுடன் முதலீட்டாளர்கள் உடன்படிக்கை செய்து கூட்டு முயற்சி ஒன்றினை ஏற்படுத்துதல். இதன் பிறகு முதலீடு செய்த நாட்டில் பாரிய உற்பத்தி நடவடிக்கையில்

ஈடுபடத்தொடங்குதல். இறுதியாக முற்றிலும் சொந்தமான உப கம்பனியாக மாறுதல். அதாவது இது உள்ளக சந்தையாக அல்லது உள்ளக கம்பனியாக காணப்படும். எனவே பல்தேசிய முயற்சி சம்பந்தமாக விளக்கப்பட்ட இக்கோட்பாடானது மூன்று வகையான காரணிகளைக் கொண்டுள்ளது. இம்மூன்ற காரணிகளும் நேரடி வெளிநாட்டு முதலீடு சம்பந்தமாக மூன்று கேள்விக்கு விடையளிப்பதாகவேயுள்ளது.

உரிமை நோக்கிய அனுகூலம் என்பது ஏன் ஒரு நிறுவனம் இன்னொரு நாட்டிற்கு செல்ல வேண்டும்? அவ்வாறு செல்வதால் கிடைக்கும் நன்மை என்ன என்பதை விளக்குகின்றது.
அமைவிடம் நோக்கிய அனுகூலம் என்பது ஒரு நிறுவனம் எந்த பிற வெளிநாட்டிற்கு செல்வது என்பதாகும். அவ்வாறு செல்வதால் ஏற்படும் நன்மைகள் என்ன என்பதனை விளக்குகின்றது. உள்ளகமயமாதல் அனுகூலம் ஆனது ஒரு நிறுவனம் எப்படி நுழைவு முறைகளை பயன்படுத்தி வெளிநாட்டில் நுழைய வேண்டும் என்பதாகும்.

எனவே வெளிநாட்டு உப கம்பனிகளை ஏற்படுத்துகின்ற நிறுவனத்தின் தீர்மானத்திற்கு பங்களிப்பு செய்கின்ற அனைத்து வகையான காரணிகளையும் ஒன்றிணைப்பதே OLI இன் நோக்கமாகும். இது வேறுபட்ட நாடுகளுக்கிடையிலான வெளிநாட்டு நேரடி முதலீட்டினை விளக்குகின்ற கோட்பாடாக மட்டுமன்றி வெளிநாட்டு நேரடி முதலீட்டினை தீர்மானிப்பதனை

கட்டுப்படுத்துகின்ற காரணிகளினுடைய வகைப்படுத்தலாகவும் இது அமைகின்றது. ஆகவே ஒரு வெற்றிகரமான பல்தேசிய முயற்சியாண்மையானது அதனுடைய சந்தைப்பங்கினை உச்சப்படுத்த வேண்டுமாயின் எந்த ஒரு நிறுவனமோ அல்லது ஒரு கைத்தொழிலோ இம்மூன்றினை ஒன்றிணைத்து இயங்கலாம் என்பதாகும். இதனையே வெளிநாட்டு நேரடி முதலீட்டில் அல்லது சர்வதேச உற்பத்தியில் பல்நோக்கு கோட்பாடு என அழைக்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் இருபது வருடங்களாக வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான ஆய்வுகள் மேற்க்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வுகளில் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற ஒரு காரணியாக வெளிநாட்டு நேரடி முதலீடும் நோக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் இலங்கையிலும் வெளிநாட்டு நேரடி முதலீடு சம்பந்தமான சில குறிப்பிட்ட ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

1970 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீடானது பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு கருவியாக கொள்ளப்படவில்லை. இதன் பின்னரே அனேகமான உலக பொருளாதாரங்கள் திறந்து விடப்பட்டதன் காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீடானது தொழிநுட்ப வடிவிலோ அல்லது மனித மூலதன வடிவிலோ நாடுகளில் நுழைந்து நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தத் தொடங்கியது.

வளர்ச்சி தொடர்புடைய ஆய்வுகளினுடைய நோக்கம் எவ்வாறு வளர்ச்சியும் வளர்ச்சியினைத் தீர்மானிக்கின்ற காரணிகளும் தொடர்புபடுகின்றது என்பதாகும். எனவே பொருளாதார வளர்ச்சிக்கு பல ஆய்வுகளில் பாரியளவு ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்வேறு காரணிகளில் வெளிநாட்டு நேரடி முதலீடும் முக்கியத்துவம் பெறுகின்ற காரணத்தினாலேயே பல்வேறு ஆய்வாளர்கள் இது தொடர்பாக ஆய்வுகளை மேற்க்கொண்டு வளர்ச்சிக்கும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையிலான தொடர்பானது விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மேற்க்ொகள்ளப்பட்ட ஆய்வுகள் அபிவிருத்தியடைந்த நாட்டில் மட்டுமன்றி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலான ஆய்வுகள் மரபு ரீதியான அல்லது விஸ்தரிக்கப்பட்ட உற்பத்தி தொழிற்பாட்டினைப் பயன்படுத்தி பழைய, புதிய வளர்ச்சிக் கோட்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளன.

## உசாத்துணை நூற்பட்டியல்


Bo Sodertson & Geoffry Reed .1994. *International Economics*. London.: Macmillan

Chan,S.1995. *Foreign Direct Investment in a Changing Global Political Economy.* London: Macmillan.

Grimwade,N.2000. *International Trade*. London: Routleedge.

Oxelheim,L.2001. *On the Treatment of Financial – Specific Factors Within the OLI Paradigm*. Sweden: The Research Institute of Industrial Economics.